Academic Research News
Peer-Reviewed Journal



Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

# Padukar People's Cultural Registration in Rajam Krishnan's Novel *Kurinjithen*

**Dr. T. Prahalathan,** Associate Professor, Tamil Department, Sindhi College, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-4400-3356
**DOI: 10.5281/zenodo.11192193**

## Abstract

*Rajam Krishnan is one of the most significant female novelists. One of her of novels is 'Kurinjithen' which focusses of the people of the Padagar community living in the Nilgiri mountains. The Padaga's life and progress were recorded in the novel. Natural life is the state of love of human life that explains the contact of social change in the society. It brings out change in life style of three generations of Padagar life. The novel portrays the natural and social life of the people. Rajam Krishnan's novel "Kurinjithen" offers a vivid portrayal of the cultural imprints of the Padukar people, a tribe indigenous to the Western Ghats region of India. "Kurinjithen" provides insights into the cultural customs and rituals of the Padukar people, including their ceremonies, festivals, and rites of passage. These rituals often revolve around agricultural cycles, hunting, and spiritual ceremonies aimed at appeasing their deities and ensuring prosperity and well-being. Rajam Krishnan's narrative might shed light on the social structure and community dynamics within Padukar society, including kinship systems, leadership roles, and intra-community relationships. These aspects contribute to the cohesion and resilience of the Padukar community amidst social and environmental challenges. By portraying these cultural imprints, Rajam Krishnan's "Kurinjithen" offers readers a clear understanding of the Padukar people's rich cultural heritage and their life in the Western Ghats. Hence, this article explains the culture imprints found about the Padagar people in the novel.*

**Keywords:** Rajam Krishnan, Padakar, *Kurinjithen*, *Social*, *Culture*.

## References

[1] Rajam Krishnan. *Kurinchithen*. Nam Tamilar Pathipagam, Gaura Agencies, Chennai, 2022.
[2] *Ezhuthe Vazhvu: Rajam Krishnan*. https://www.hindutamil.in/news/supplements/penn-indru/188164-.html Accessed on 20 April 2024.
[3] Rajam Krishnan. *Kaalam Thorum Penmai*. Thagam, Chennai, November, 1990.
[4] Engels, B. *The Origin of the Family, Private Property, and the State*. Bharathi Puthagalayam, Chennai, February, 2008.
[5] Thanthai Periyar. Pen Yen Adimaianal? Bharathi Puthagalayam, Chennai, Reprint, 2006.
[6] Prema, Ira. Karppu - Kalacharam. Tamil Puthagalayam, Chennai, November, 1998.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Academic Research News
*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# இராஜம் கிருஷ்ணனின் *குறிஞ்சித்தேன்* நாவலில் படுகர் இனத்தின் பண்பாட்டு பதிவுகள்

முனைவர் த. பிரகலாதன், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, சிந்திக்கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4400-3356
**DOI: 10.5281/zenodo.11192193**

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண் நாவல் ஆசிரியர்களுள் குறிப்பிடத்தகுந்த ஒருவர் இராஜம் கிருஷ்ணன். அவரின் படைப்புகளுள் ஒன்று குறிஞ்சித்தேன் எனும் நாவல் ஆகும். நீலகிரி மலையில் வாழும் படகர் மக்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது இது. படகர் குடும்பங்களின் உறவு சிக்கல்களும் அதனால் ஏற்படும் உணர்ச்சி போராட்டங்களும் கூறப்படுகின்றன. படகரின் உழைப்பும், பண்பும் முன்னேற்ற சிந்தனையும் பதிவு செய்யப்படுகின்றன. இயற்கை வாழ்வு, மனித வாழ்வின் அன்பு நிலை, இவற்றை சமூக மாறுதலின் பின்னணியில் விளக்குகிறது. மூன்று தலைமுறை மாந்தர்களின் போக்கு காட்டப்படுகின்றது. வடகரின் வாழ்வு மரகத மழை பின்னணியில் நிகழ்கிறது. இயற்கை சித்தரிப்பு, சமூக இயல் சிறப்பிடம் பெறுகின்றன. சமூக நம்பிக்கைகள் காட்டப்படுகின்றன. அவர்களின் இனமரபுகளும் கூறப்படுகின்றன. நாவலில் படுகர் இனத்தின் பண்பாடு பதிவுச் செய்யப்பட்டுள்ளதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** இராஜம் கிருஷ்ணன், *குறிஞ்சித்தேன்*, படகர் இனம், *பண்பாடு*, சமூகவியல்.

## முன்னுரை

தாய்வழி சமூக அமைப்பே மனித சமூகத்தின் தொல் அமைப்பு என்று பெண்ணியலார் கூறுகின்றனர். அதைப் போன்று சங்க காலம் முதல் நவீன காலம் வரை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களும் தங்கள் படைப்புகளை உலகுக்கு வழங்கியதால பெண் எழுத்தாளர்கள் போற்றப்படுகின்றனர். நாவல் வடிவம் தமிழில் தோன்றி வளர்ந்த நிலையில் நாவல் இலக்கியத்தைப் பெண் எழுத்தாளர்கள் படைத்துத் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தனர். அவ்வகையில் நாவல் இலக்கிய உலகில் இராஜம் கிருஷ்ணன் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார் என்றால் அது உண்மை.

## இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்

ரோஜா இதழ்கள், சோலைக்கிளி, விலங்குகள், தங்க முள், பெண்குரல், அன்புக்கடல், மாயச்சுழல், பானுவின் அலையருவி, அமுதமாகி வருக, நிழற்கோலம், வளைக்கரம், புயலின் மையம், வேருக்குநீர், முள்ளும் மலர்ந்தது, கூடுகள், வீடு, அலைவாய்க் கரையில், கரிப்பு

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

மணிகள், கூட்டுப்புழுக்கள் என ஐம்பத்தி நான்கு நாவல்களை இலக்கிய உலகுக்குப் படைத்துள்ளார். "வேருக்கு நீர் " என்ற நாவல் சாகித்திய அகாதமி பரிசு பெற்றது.

**ஆசிரியரின் சிறுகதைகள் & குறும் புதினங்கள்**

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் சிறுகதையிலும் தம் எழுத்தாற்றலை நிறுவியவர். *அலைகடலில், நித்திய மல்லிகை, மலைரோஜா, அல்லி, பச்சைக்கொடி, ஊசியும் உணர்வும்* முதலிய பதினாறு சிறுகதை தொகுதிகளை வெளியிட்டுள்ளார். கட்டுக்காவல், இறுதியும் தொடக்கமும், பவித்ரா, கைவிளக்கு அலைகள் இவர் படைத்த குறும்புதினங்கள் ஆகும்.

**குறிஞ்சித்தேன்**

*குறிஞ்சித்தேன்* 1963 இல் வெளிவந்த நூலாகும். நீலகிரி மலையில் வாழும் மக்களை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்டதே இந்நாவல். அங்கே, வழிவழியாய் வாழ்ந்து வரும் படகர் இனமக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இயற்கையோடு ஒட்டி வாழ்ந்துவந்த அம்மலைவாழ் இனவாழ்க்கைப் போக்குகளை வெளியில் பெருகிவரும் நாகரிக மாற்றங்களும் வணிகமும் தொழில் வளர்ச்சியும் பாதிக்கின்றன. மலையில், காப்பி தேயிலை பயிரிடும் தொழில்கள் ஏற்படுகின்றன. இவற்றால் பணம் ஒன்றையே கோளாகக் கொண்டவர்கள். மலைக்கு வெளிப்புற மனிதர்களின் இயல்புகள், மலை வாழ் மனிதரிடையேயும் மெல்லப் பரவுகின்றன. இச்சமூக, பொருள மாற்றங்களால் இரண்டு படகர் குடும்பங்களில் உறவுச் சிக்கல். அதனால் ஏற்படும் உணர்ச்சிப்போராட்டங்களும், இந்நாவலின் அடிப்படையாக அமைந்துள்ளன. நீலகிரி தொல்குடிகளான படுகர் வாழ்க்கை பின்னணியில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது.

**கதைக்கருவும் அமைப்பும்**

மனித வாழ்வின் நிலையான ஈரங்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் செயற்கை வாழ்வு அன்புக்கு பொருந்தாது இயற்கை வாழ்வு சிறந்தது என்ற கருத்து நாவலின் உட்கருத்து ஆகும். இயற்கை வாழ்வு என்பதன் இனிமையாக குறிஞ்சித்தேன் என்ற பெயரால் குறிப்பாகச் சுட்டுகிறார். படகர் இனத்தாரின் இயற்கை வாழ்வானது உழைப்பாலும் பண்பாலும் மேலும் சிறப்பு பெற்றிருப்பது. உழைப்பு சக்தியையும் உணர்வையும் வளர்ந்து வரும் நாகரீக மாற்றங்கள் பாதிக்கின்றன. தலைமுறைகளால் இருந்து வரும் மரபுகள் மாறுகின்றன சமூக மனிதனின் உறவுகளுக்கு இடையே போராட்டங்கள் மிகுந்தன. இவ்வாறு ஏற்பட்டு வரும் மாறுதல்களின் பின்னணியில் கதை அமைகிறது.

**பண்பாட்டுச் சித்தரிப்பு திறம்**

படகர் சமூகம் இயற்கைப் பின்னணியில் இயற்கையைச் சார்ந்து வாழ்வது; அதோடு தனக்கெனச் சில நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டது. படகரின் வாழ்வியலில் நிகழும் போராட்டங்களைச் சித்தரிக்கும் நாவலாசிரியருக்கு இயற்கைச் சக்தியையும் படகரின் பண்பாட்டுத் தன்மைகளையும் வெளிக்கொணர்வது மிகத்தேவையானதாகி விடுகிறது. இச்சித்தரிப்பு மட்டுமே அவர்களின் உயிர்ப்பினை உணர்த்த

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

முடியும். எனவே, பின்புலமாகிய இயற்கைச் சித்தரிப்பும் சமூக இயலும் நாவலில் சிறப்பிடம் பெறுகின்றன.

**நாவலில் காணப்படும் பண்பாட்டு மரபுகள்**

குடும்பத்தலைவனைச் சுற்றிக் குழந்தைகள் மற்றும் எல்லோரும் உட்கார்ந்தால் பெரிய வட்டியில் அமுது படைக்க வேண்டும் என்பது பொருள் (ப. 36), பிரசவ காலத்தில் நிரைச்சல் கட்டுதல் (ப. 41) பால் கறக்கும் வைபவத்தில் 'கூடு' கூடாகத் தானியம் சமைத்து விருந்து வைத்தல் (ப. 87) இளம் பெண் மார்புக்குமேல் வெள்ளை முண்டு அணிந்திருத்தல் (ப. 62), சாவு வேளையில் வீரராய பணம் தருதல் (ப. 199) எனப் பல்வேறு படகர் மரபுகளையும் நாவலில் ஆசிரியர் காட்டியுள்ளார். ஆயினும் இவை கதைப் பின்னலிலிருந்தோ பாத்திரங்களின் இயக்கத்திலிருந்தோ விடுபட்ட நிலையில்லாமல் ஒன்றியே அமைந்துள்ளன. காலை எழுந்து கிழக்கு நோக்கி கதிர்வதைக் கும்பிடுதல். எருமையின் மடியில் கை வைத்து பார்க்க குழாயில் வெண்நுரை பொங்குமாறு பால் கறப்பது மண்ணில் பாடுபடுவது என அவருடைய இனவாழ்வின் இயல்பைப் பாத்திரங்கள் வழி காட்டுகிறார். யார் இறந்தாலும் பாடுவது ஆடுவது ஆகியன படகரின் இன மரபு. இது போன்ற நிகழ்வுகளைப் பதிவு செய்கிறார்.

> **கிருஷ்ணனுக்கு சொந்தமாக இருந்த கருப்பு மண்ணில் கிழங்கு பயிருக்கு களை எடுத்துக் கொண்டிருக்கையிலே தான் அவள் சுவாசம் நிறைவுடன் அடங்கியது. மண்ணின் பெருமகளான அவளைப் பூமித்தாய் பெருங்கருணையிடம் எந்த ஒரு வேதனையும் இன்றி தன் மடியில் எடுத்துக் கொண்டாள் (பக். 405) என்பவை ஆசிரியரின் வரிகள்.**

**படகரின் நம்பிக்கைகள்**

நாவலில், படகரின் சமூகத்திலுள்ள பல நம்பிக்கைகளைக் காண்கிறோம்.

1. **இரவில் ஆமணக்கு எண்ணெய் ஊற்றிய விளக்கு இல்லையென்றால் நிலம் விளையாது.**
2. **மாடு மடி சுரக்காது என்ற நம்பிக்கை (ப.12) பால்கறந்து**
3. **பெரிய பானையில் ஊற்றும்போது பெண்கள் குறுக்கே வர கூடாது (ப.36).**
4. **காட்டுக் குறும்பரின் மாயமந்திரத்தை நம்புவது {ப54)**
5. **புனித நெருப்பைக் காப்பாற்றுபவன் ஆடம்பர சுகபோகங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்ற நம்பிக்கை (ப.57).**
6. **நெருப்பைக் காப்பவன். ஒரே முறை சமைத்துண்ண வேண்டும்; அதுவும் சட்டியை ஒரே தரந்தான் கவிழ்க்க வேண்டும்.**

இவ்வாறு அவர்களுடைய நம்பிக்கைகளையும் எழுந்து வரும் புதிய சமூகநிலையையும் ஆசிரியர் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

**மானிடவியலாரின் பணியில் இராஜம் கிருஷ்ணன்**

மானிடவியல் துறையினர் இந்தியப் பழங்குடிகளின் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்தனர். மானிடவியல் ஆய்வு அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள தமிழ்த் துறை ஆய்வாளர்களும்

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

வாழ்வியலைப் பதிவு செய்துள்ளனர். ராஜம் கிருஷ்ணன் அவர்கள் இநாவலில் படகர் இன மக்களின் வாழ்வியலை ஆய்வாளரைப் போல பதிவு செய்துள்ளார். தன்னுடைய முனைப்பான சிந்தனையில் திருமணத்தின் மறுபக்கமாக விளங்கும் பண்பாட்டின் மற்றொரு உள்ளமைப்பான உறவு முறையையும் இணைத்து சமூகத்தின் அமைப்பினை விளக்க இயலும் என்பதை நிரூபித்தவர் பிரெஞ்சு மானிடவியல் பிளாட் லெவல் ஆவர் (பக்.40) நாவல் ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் வடகர் மக்களின் திருமண முறைகளைப் பதிவு செய்துள்ளார்.

**அனுபவ நாவல்**

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் தம் நாவலை படைக்கும் போது அவ்விடங்களுக்கு நேரில் சென்று மக்களோடு பழகி பண்பாட்டு முறைகளை அறிந்து நாவல்களைப் படைத்துள்ளார். கருப்பு மணிகள் எனும் நாவலில் உப்பளங்கள் நிறைந்த இடத்தில் வசிக்கும் மக்களை நேரடியாக சந்தித்து அதன் மூலம் பெற்ற அனுபவத்தை நாவலில் பதிவு செய்துள்ளார். அதைப்போல குறிஞ்சித்தேன் நாவலிலும் நேரடியாகச் சென்று இயற்கையையும் ரசித்து, அது மாறும் தன்மையையும் வருந்திக் கூறுகிறார்.

> **இந்நாட்களில் குறிஞ்சி பூக்கும் பருவமே தெரியவில்லை இயற்கை வாழ்வு களைந்து சேர்க்கை வாழ்வின் அடித்தளம் முயற்சி போல் பணத்தைக் குறியாகக் கொண்ட வாழ்வுக்குத் தேவையான தேயிலை காபியை மலைகளில் நீல நடுக கண்ணு கட்டி வரையில் இடம் கொண்டன. பச்சை தேயிலை மணத்தை நுகர்ந்து கொண்டு அந்த குறிஞ்சிதேன் இனிமையைக் கற்பனையால் கண்டு ஒரு வாழ்வில் நிகழும் மாற்றங்களையும் போராட்டங்களையும் சித்தரிக்க உணர்ந்திருக்கின்றேன். நான் இந்த நவீனத்தை எழுத துணிந்த நாட்களில் மனித வாழ்வின் நிலையாய ஈரங்களில் நின்று அகன்று செல்ல வழிவகுக்கும் வாழ்வின் வேறுபாட்டைக் குறியாகத்தான் புலப்படுத்த எண்ணினேன். இன்று அந்தக் கருத்து வருத்தத்தக்க வகையில் அச்சமூட்டும் உண்மையாக பரவியிருக்கிறது. எனினும் மனித இனத்தின் இயல்பான ஊற்று கண்கள் அன்பின் அடி நிலையை கொண்டதென்று நம்பிக்கை கொள்வோம். (முன்னுரை)**

என்று முன்னுரையில் குறிப்பிடுகிறார். முதல் இரண்டு பாகங்களிலும் காணப்படும் கதை நிகழ்ச்சிகளில் மரகத மலையின் இயற்கை வாழ்வையும் அதனுள் மெல்ல புகுந்து வரும் நவீன மாற்றத்தையும் ஆசிரியர் காட்டுகிறார்.

**மன எழுச்சி**

நாவல் ஐந்து பாகங்களாகப் பிரித்து மூன்று தலைமுறைகளின் வளர்ச்சியைப் படிப்படியாகக் காட்டும் போக்கு ஆசிரியரின் முன்கூட்டி திட்டமிட்ட செயல் என்று கூறலாம். வடகரின் வாழ்வை மரகத மலை பின்னணியில் இயற்கை சக்தியாகக் கண்டு அதில் காணப்படும் கூட்டுணர்வையும் அன்பையும் நன்கு உணர்ந்து கொள்கின்றார் ராஜம் கிருஷ்ணன், அதே வேளை அன்பு நிலையிலிருந்து மீறும் அதன் இயக்கத்தை உற்று

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

நோக்குகிறார். இந்த உள்ளத்தில் ஏற்பட்ட எழுச்சியே படைப்புக்குக் காரணமாக அமைவதை உணர முடியும்.

**நவீன மாற்றங்கள்**

சமூக நிலை மாறும் போது படகர் மக்களிடையே உள்ள உறவுகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. அவருடைய கூட்டுணர்ச்சி முன் போல செயல்படவில்லை. மரகத மலையில் பின்னாளில் பண ஆசை இல்லாத மனிதரே இல்லை என்கிறார் ராஜம் கிருஷ்ணன். "அது மட்டும் அல்ல போண்டாவும் மசாலா தோசையும் ருசி கண்ட நாவுக்கு கொறளியும் சாமையும் பிடிக்குமா " என்று கூறுகிறார் (பக்: 252) புதிய பொருளாதார உறவுகள் ஏற்பட்ட தொழிலாளி முதலாளி போராட்டமும் மரகத முறையில் ஏற்பட்டு விட்டதை நாவலாசிரியர் சுட்டிச் செல்கிறார் நாவலை முடிக்கும் போது நவீன மாற்றங்களுக்கு எதிர்ப்பு காட்டிய ஜோதி புதிய உலகை கண்டு ஏற்றுக் கொள்வதாகவே முடித்துள்ளார் ராஜம் கிருஷ்ணன். படகரின் சமூகம் இயற்கை வாழ்வின் இனிய நிலையில் இருந்து வந்துள்ளது. அதுவே அதன் பெருமை. அவர்கள் வாழ்வில் உழைப்பு சக்தியின் முதன்மை நபராக இருந்துள்ளனர். படகரின் சமூக நம்பிக்கைகள் காலப்போக்கில் மாறுவதால் ஏற்படும் போராட்டங்களை புரிந்து கொள்ள படகரின் இன மரபுகளோடு இணைத்து காட்டுகின்றார்.

**படகர் மக்கள்**

நீலகிரி மலையில் வாழ்ந்து வருபவர்கள். படுகர் இனத்தார் மலைச்சரிவுகளில் உருளைக்கிழங்கு கோசு போன்ற பயிர்களைப் பயிரிட்டு வாழ்பவர்கள். அவர்கள் வழிமுறையில் உள்ள நாகரீக மாற்றங்களினால் பாதிக்கப்படாமல் மலைத்தொடர்களுக்குள் இயற்கையோடு ஒன்றி. வாழ்பவர்கள். எருமை மாடுகளையே செல்வமாகக் கொண்டு தங்கள் வளர்த்துக்கொண்டு தங்கள் வாழ்க்கை மரபுகளையும் நியதிகளையும் வழுவாமல் காத்து வருபவர்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவில்தான் என்றாலும் உழைப்பாலும் தங்களுடைய கூட்டு வாழ்க்கையாலும் பெருமையுடன் திகழ்பவர்கள். சிறு சிறு குடியிருப்புகளாக ஆங்காங்கே வாழ்ந்து வருபவர்கள் என இராஜம் கிருஷ்ணன் அவர்கள் படகர் இனத்தைப் பதிவு செய்கிறார். படகர் சமூகம் இயற்கை பின்னணியில் இயற்கையைச் சார்ந்து வாழ்வது. அது தனக்கென சில நம்பிக்ககிகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டது. படகரின் வாழ்வியலில் நிகழும் போராட்டங்களைச் சித்தரிக்கும் நாவலாசிரியருக்கு இயற்கை சக்தியையும் படகரின் பண்பாட்டு தன்மைகளையும் சித்தரிப்பது மிகத் தேவையாகிவிடுகிறது.

**பெண்மைக்கு முதலிடம்**

நாவலில் பெண்களுக்கு எழுச்சியூட்டும் வரிகளை எழுதுகிறார். பெண்களின் நிலையை எடுத்துரைக்கிறார்.

**அசட்டுப்பெண்ணை ஏன் தயங்குகிறாய்? இதோ பாரம்மா பெண் அடுப்பு தீ போல குடும்பத்தை நல்ல விதமாக உருவாக்கும் சக்தி. அவள் புகையலாமா? பாலைக் கூட**

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

> **குடிக்காமல் வீட்டுக்காக தியாகம் செய்யும் சக்தி ஒளிர நீ இந்த வீட்டுக்கு நீ வருகிறாய் அம்மா. மங்கலத்துக்கு உரியவளாக சீர் குலைந்து வரும் ஒரு குடும்ப செல்வத்தை நிரப்ப நீ வருகிறாயம்மா.” (பக் 163)**

என்பதைப் பதிவு செய்கிறார்.

> **இறைவன் நடனமாடும் போது, இடது காலை ஆகாசத்தை நோக்கி உயரத் தூக்கினார். இறைவி பெண்ணாக இருந்த காரணத்தினால், அவ்வாறு தூக்கவில்லை. அவள் அவ்வாறு செய்ய இயலாமல் நாணம் தடுத்தது எனவே, இறைவி, தலை குனிந்து, தான் ஆட்டத்தில் தோற்றதாக ஒப்புக்கொண்டு, ஊரைவிட்டே பெயர்ந்தாளாம். புராணங்களில் வரும் இக்கதைக்கு, ஆண் - ஆண் தான். அவன் நாணம் பாலிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பெண்ணுக்கு எந்த நிலையிலும் நாணம் இன்றியமையாதது என்ற அந்த மானக் கோட்பாட்டை விளக்குவதற்காகவே அமைகிறது. சைவ சித்தாந்தம் புருஷச்சிவனை ஏற்றி வைக்க இப்படி அன்னை வடிவைக் கொச்சைப்படுத்தி இருக்கிறது.' (காலந்தோறும் பெண். ப.29)**

என்கின்ற மாற்றுக் கருத்தாடலை முன்வைக்கிறார்.

**இயற்கை வர்ணனை**

நாவல் தொடக்கத்திலேயே வடகரின் இயற்கை வாழ்வினை வர்ணனை மூலம் சுட்டிக் காட்டுகிறார். மரகத மலைச்சரிவில் ஜோகி உட்கார்ந்து இருக்கிறான். அதனை விளக்குகிறார்.

> **கார்த்திகை மாதத்தில் இறுதி நாளின் அந்த பிற்பகலில் பசுங் கம்பளத்தை விரித்தார் போல் பறந்து கிடந்த மலைச்சலில் ஜோகி சாய்ந்தது தான் அந்த சரியோடு ஒட்டி நீண்டு செல்லும் குண்டில் காணும் குடியிருப்பு தான் அவனுக்கு உரிய இடம் அவன் பிறந்த இடம் குடியிருப்பில் சுத்தி மூன்று பக்கங்களிலும் மரகத குண்டுகள் சூழ கிழக்கில் மட்டும் சோலை சூழ்ந்த காரணங்கள் நீண்டு சென்று வெளி உலக சந்ததிகளும் வண்ண வாசனைகளும் கோழி மனக்கல்களும் அவ்விடத்தை எட்டி விடாதபடி மீண்டும் குண்டுகளை சுற்றி வளைத்து காத்து வந்தன முப்புறமும் மரகத குண்டுகள் சூழல் நடுவே விளங்கிய அந்த குடியிருப்புக்கு மரகத மலைஹட்டி என்றே பெயர் ( பக். 10)**

ரங்கன் இரவில் குன்றுகளிடையில் நடந்து வரும் போது வர்ணிக்கும் நிலை நினைக்கத் தகுந்தது.

> **பூமித்தாய்க்கு வண்ணஆடைகள் அணிவித்தாற் போல் தோன்றும் விளைநிலங்களை அவன் கடந்து வருகையில் இருள் சூழ்ந்து விட்டது. சோம்பலை உடையவனின் உடமை தான் என்று ஆங்காங்கே தரிசாக்கு கிடைக்கும் தான்தோன்றிகளாய் காணும் விளைநிலம் ஆணும் பெண்ணும் ஒத்து வாழாத குடும்பத்து உடையது என்பதை தெரிவித்தது ( பக்: 30)**

பொருளாதாரச் சுதந்திரமும், கல்வியும், உயர் பதவியையும் பெற்ற பின்பு கூட, தனித்து சுயச்சார்பை வளர்த்து விடாதபடி, கணவன் ஆதிக்கம் செலுத்துவதற்கு இக்கற்புக்

கொள்கையே காரணமாகிறது." என்றும், தம் நூல்களில் இரா.பிரேமா" (ப. 45) எடுத்துக்காட்டுகிறார்.

**பிள்ளைக்கனி ஒன்றை ஈன்று, பசுமை பாயும் உடலில் மின்னும் புதிய தாய்மையின் நிறைவும் பூரிப்பும் விளங்க அமைதியில் ஒன்றியிருக்கும் ஓர் அன்னையைப் போல் அந்த மலைப்பிரதேசம் பிற்பகலின் அந்த மோனத்தில் காட்சியளித்தது (பக் 9)** என்றும்

**பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொள்ளும் எழில் வடிவில் வளமார் நங்கையாய் வசந்தத்தில் நாணிக் கண் பொத்தி நிற்கும் வனச் செல்வியாய், நீல மோகினியாய், வானவனின் காதலி யார் எழில் நிறைந்த திகழ்ந்தது அந்த மலை பிரதேசம் (பக்.89)**

என்றும் ஒவ்வொரு அத்தியாயம் தொடக்கத்தில் இயற்கை சித்தரிப்பை காட்டி எழுதும் முறையைக்காண முடிகிறது.

**மாசி மாதத்தில் இன்பச் சூரியன் விண்ணிலே ஒளிரும் ஒளி மணியாய் வானமெல்லாம் நீல பட்டாடை வீரிய எழில் நகை புரியும் இளங் குமரனாய் நீலமலை அன்னையைக் காண வந்து விட்டான்" என்றும் பனி என்னும் சல்லாத் துகிலால் தன்னை மூடி மறைத்து கொண்டு இருந்தாள் மலை அன்னை. (பக். 47)**

உவமை உருவகங்களும் காணப்படுகின்றன. முதல் நான்கு பாகங்களின் தொடக்கத்திலும் இயற்கை வர்ணனை இடம்பெற்றுள்ளது. இரண்டாம் பாகத்தில் கிருஷ்ணன் இளமை கால உணர்வுகளை ஒட்டி அமைந்துள்ளது. மூன்றாம் பாகத்தில் வடகரின் வாழ்வியலுக்கு ஒத்த பாங்கிலும் ஆசிரியரின் கற்பனைகளிலும் இயற்கை வருணனை அமைந்துள்ளது. நாலாம் பாகம் வளர்ச்சியை காட்டும் நோக்கத்தில் அமைந்துள்ளது. மொத்தத்தில் இயற்கை சக்தியின் வழி இயங்கும் படகர் சமூக நிலை வெளிப்படுத்தப்படுகிறது.

**கதைச்சுருக்கம்**

நீலகிரி மலையில் வாழ்ந்து வருபவர்கள் படகர் இனத்தவர், நாகரிக மாற்றங்களால் பாதிக்கப்படாமல் மலைத்தொடர்களுக்குள் இயற்கையோடு ஒன்றி வாழ்பவர்கள் எருமை மாடுகளை வளர்த்து வாழ்க்கை மரபுகளையும் நியதிகளையும் வழுவாமல் காத்து. எண்ணிக்கையில் குறைந்த அளவு உடையவர் என்றாலும் உழைப்பாலும் தங்களுடைய கூட்டு வாழ்க்கையாலும் பெருமையுடன் திகழ்ந்தவர்கள். மரகத மலை குடியிருப்பில் உள்ள வெங்கையாவின் குடும்பமும் மணியக்காரர் ஆன கரியமல்லரின் குடும்பமும் இக்கதையில் வரும் இரண்டு குடும்பங்களாகும். இரண்டு குடும்பத்தின சிறுவர்கள் சந்திக்கின்றனர். லிங்கையாவின் மகன் ஜோகி, லிங்கையாவின் அண்ணன் மாதனின் மகன் ரங்கன், ஜோகியின் மாமன் மகளான பாரு, கரியமல்லரின் பேரனான கிருஷ்ணன் முதலிய கதை மாந்தர்கள் முதலில் வருகின்றனர். மரகத மலையில் ஒரு சரிவில் ஒன்பது வயது சிறுவன் ஜோகி அமர்ந்திருக்கிறான். அவனை நோக்கி ரங்கன், கிருஷ்ணன் நண்பர்கள் வருகின்றனர். கிருஷ்ணன மட்டும் பள்ளியில். நட்ந்ததை தங்களுக்குள் விவாதித்தனர். சூரியன் இல்லை என்றால் என்ன ஆகும்?

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

இதன் மூலம் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகளால் சண்டை ஏற்படுகிறது. ரங்கன் வயதில் மூத்தவன். தாய் இல்லாதவன் முரடன். அவனை கிருஷ்ணன் முட்டாள் என்று பேசுகிறான். ரங்கன் அவன் மேல் கோபத்துடன் பாய இருவரும் கட்டி புரள்கின்றனர். அப்போது பாரு என்ற சிறுமி ஓடி வருகிறாள். அவள் அருகில் உள்ள மணிக்கல் ஹட்டி என்ற குடியிருப்பில் அம்மாவுடன் இருப்பவள், அவள் ஜோகியை பார்க்க ஓடி வந்தாள். சண்டை முடிந்ததும் பாரு ஜோகியுடனும் மற்றவர்களுடனும் ஹட்டிக்கு போய் விட்டாள் ரங்கன் கோபத்துடன் இருந்தான். ஹட்டியில் பாரு ஜோகி, ஜோகியின் தாய் பார்வின் தாய் எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ரங்கனின் தந்தை மாதிரி தன் இரண்டாவது மனைவி அவளுக்குப் பிறந்த மகள் ஆகியோருடன் வேறுவீட்டில் வசித்து வந்தான். தனி வீட்டில் வசித்தாலும் தம்பி லிங்கையாவின் அன்பு உதவியும் நிறைய இருந்தன. மாதன் உழைப்பில் கவனம் இல்லாதவன் இறைவழிபாட்டில் நம்பிக்கை உடையவன் அவனுடைய தனித்தன்மை தம்பி லிங்கையாவுக்கு அண்ணனிடம் மதிப்பை ஏற்படுத்தியது. லிங்கையா உழைப்பில் இன்பத்தையும் பெருமையும் உணர்ந்தவன். அவருடைய மகன் ஜோகி நல்ல பையனாக வளர்ந்து வந்தாலும் அண்ணன் மகன் முரட்டு பையனாக பொறுப்பில்லாமல் வளர்ந்து வருவது அவனுக்கு வேதனை அளித்தது. ஹட்டியில் உள்ள கோயிலில் நெருப்பைக் காக்க ரங்கனை அமர்த்த வேண்டும் என்பதும் லிங்கையாவின் எண்ணம். தன்னுடைய எருமைகளில் இரண்டு ரங்கனுக்கு கொடுத்து பால் கறக்கும் விழாவுக்கும் ஏற்பாடு செய்தான், தன் குடும்பம் வேறு அண்ணன் குடும்பம் வேறு எந்த வேறுபாடு இல்லாமல் உதவி புரிந்து வாழ நினைத்தான் லிங்கையா.

ரங்கன் ஹட்டியை விட்டு நகரத்துக்குச் சென்று காசு சம்பாதித்து வாழ வேண்டும். துரைமார்களை அண்டி நகர வாழ்வில் வாழ வேண்டும். ஊட்டிக்கு போய்விட வேண்டும் என்ற எண்ணத்தால் ஊட்டிக்கு ஓடிவிடுகிறான். லிங்கையாவின் மனம் மிகவும் வருந்தியது. அதற்கு காரணம் அவன் கனவில் அவருடைய தெய்வம் தோன்றி கோயில் நெருப்பைக் காக்க ஜோகியே பொருத்தமானவர் என்று சொல்லியிருந்தது. ஆனால் இங்கே ரங்கனை நல்லவனாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நெருப்புக்காக ரங்கனையே தெய்வம் விரும்பியதாகப் பொய் சொன்னான். ரங்கன் ஓடி விட்டதால் லிங்கையா வருந்தினான். பிறகு ஜோகிக்கு பால் கறக்கும் பொறுப்பு வருகிறது தொடர்ந்து ஜோகியே நெருப்பு காக்கும் பணிக்கும் செல்கிறான். ஜோகி இளைஞன் ஆனான். பாரு பருவம் அடைந்தாள். 12 ஆண்டுகளாக ஹட்டிபுரத்திற்கு வராமல் கோயிலிலேயே நெருப்பைக்காத்து வந்தான் ஜோகி. கிருஷ்ணன் கல்லூரியில் படித்து வந்தான் ஹட்டியில் இருக்கும் போது தற்செயலாக ஏற்பட்ட சந்திப்பால் பாருவுடன் மனதைப் பறிகொடுத்தான் பாருவும் அவனை விரும்பினாள். ஆனால் ஜோகிக்கு பாருவிடத்து காதல் மிகுந்திருந்தது. இடையே ஊட்டி சென்ற ரங்கன் துரைமார்களை அண்டி பிழைத்து எப்படியோ நாலு காசு சம்பாதித்து பாருவையும் மணக்க திட்டமிட்டான். அவனுக்கு முறைப்பெண் தானே அவள். பாருவின் அண்ணன் பீமனிடம் தன் எண்ணத்தை சொன்னான், கிருஷ்ணனும் பாருவை

விரும்புவதை அறிந்து சினமடைந்தான். எப்படியும் பாருவை மணப்பது என மனதில் முடிவெடுத்தான். ஜோகின் தாய்க்கோ மருமகளாக பாரு வர வேண்டுமென்றாள். இவ்வாறு மூன்று இளைஞர்கள் ஒரு பெண்ணுக்கு போட்டியாகவே அவர்களுக்குள் ஒரு போட்டி வைக்கின்றனர் ஹட்டி பெரியோர்கள். அது கல் தூக்கும் போட்டி பாருவின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட ஜோகி தூக்க முடியாதவன் போல் நடித்து, விட்டு கொடுத்து விட்டான். கிருஷ்ணால் தூக்க முடியாமல் தோற்றுவிட்டான். வென்ற ரங்கனை பாருவை மணக்கிறான். மனம்வருந்தி அவனுக்கு மனைவியாகிறாள் பாரு. ஆனால் லிங்கையாவின் அறிவுரைகள் அவளை மாற்றி குடும்ப பொறுப்பில் ஈடுபட செய்கின்றன. ரங்கனுக்கு ஏற்றவள் பாரு என்றான் லிங்கையா. ஜோகியின் குடும்பம் வளமை இல்லாது ஆகிவிட்டது. ஜோகி கோயில் இருந்த போது லிங்கையா உடல்நலம் குன்றினார். ஜோகிக்கும் பாருவின் தங்கை கிரிஜாவுக்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்கு குழந்தை இல்லை. பாருவுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. கிருஷ்ணனுக்கு மணமுடித்து அவன் வழக்கறிஞராக ஊட்டியில் வாழ்ந்து வந்தான். அவன் தன் மனைவி ருக்மணியுடன் எப்போதாவது ஹட்டிக்கு வருவான்.

ரங்கனுக்கு கிருஷ்ணன் மேல் பொறாமையும் சினமும் அதிகரித்தன. கிருஷ்ணனும் வளர்ச்சிக்கு மேல் வளர்ச்சி கண்டு பெரிய செல்வந்தன் ஆகிவிட்டான். ரங்கனும் அவனுக்கு போட்டியாக வர நினைத்தான். ஆனால் கிருஷ்ணன் அளவுக்கு வளர முடியவில்லை. ரங்கனின் பொறாமையும் சினமும் பாரு ஊட்டிக்கு போய் வந்த செய்தியால் மிகுந்தன. ஒரு முறை கிருஷ்ணனிடம் அது பற்றி கேவலமாக பேசி சண்டை போட்டார். ரங்கன் குடும்பத்தில் அவ்வளவாக தங்குவதில்லை ஊட்டியில் இருப்பான் மது, சீட்டு ஆகியபழக்கங்களும் உண்டு கௌரி என்ற ஒருத்தியுடன் தொடர்பும் உண்டு. பிளேக் நோயினால் பாருவின் இரண்டு குழந்தைகளும் இறந்து விடுகின்றன. தனிமரம் ஆனாள் பாரு. ரங்கனோ கிழங்கு மூலம் கிடைக்கும் பணத்தை சீட்டாட்டத்தில் தொலைத்து. விட்டான். ஒருநாள் லிங்காவிடமே நடித்து ஏமாற்றி அவர் வைத்திருந்த பணத்தை வாங்கி சென்று விட்டார். சில நாளில் லிங்கையாவும் இறந்துவிட்டார். நஞ்சன் பெரியவனாகி ஊட்டி பள்ளியில் படிக்கத் தொடங்கினான். ரங்கன் உதவி செய்வான். ரங்கன் தேர்தலில் போட்டியிட்டான் ஆனால் தோற்றுவிட்டான். செல்வாக்கிழந்து போனதால் குடித்து பொழுதுபோக்கத் தொடங்கினான். நஞ்சன் தொழிற்கல்வி பயின்று அணைக்கட்டு திட்டத்தில் பொறியாளர் வேலையும் பெற்றான். படிப்பதற்கு உதவினான் ராமன். தான் ஹட்டிக்கு வரும் வழியில் நஞ்சன் கிருஷ்ணனின் பேத்தியைச் சந்தித்தான். இருவரும் விரும்பினர் மீண்டும் ரங்கன் கிருஷ்ணன் மீது பகை கொண்டான். அணைக்கட்டு வந்தால் ஜோகி நிலத்தையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போவதாக செய்தி வந்ததுமே மனக்கசப்பு ஏற்பட்டது. பாருவோ நஞ்சன் ராமன் மகள் தேவியை மணக்க வேண்டும் என்று விரும்பினாள். இதனால் நஞ்சனுக்கும் பாருவுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. நஞ்சன் விஜயா திருமணத்தில் ஆர்வம் கொண்ட கிருஷ்ணன் பழனி கோயிலில் யாருக்கும் தெரியாமல் மணம் முடிக்க ஏற்பாடு செய்தான். செய்தி அறிந்து பாரு துடித்தாலும்

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

இறுதியில் அவளும் சம்மதித்து பழனிக்குச் செல்ல ஆயத்தமானாள். செல்லும் வழியில் ஆர்ப்பாட்டத்துடன் கூட்டம் வந்தது அணைக்கட்டு தொழிலாளரின் கல்வி உயர்வு போராட்டமும் ரங்கன் வழிநடத்திய நிலம் கொடுப்பது ஆர்ப்பாட்டமும் நடந்தன. ஆர்ப்பாட்டம் மிதமிஞ்சு போய்விடவே போலீசார் சுட்டனர். மரணம் அடைந்தான் ரங்கன். கிருஷ்ணன் தான் ரங்கனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றான். உயிர் பிரியும் போது யாவரும் கிருஷ்ணனுடன் இணைந்தனர். பிறகு எல்லாம் நன்றாக நடந்தது ஹட்டுமக்கள் ஒன்றுபட்டனர். நஞ்சன் விஜயா திருமணம் நடைபெற்றது. வடகர் மகிழ்வுடன் வாழ்ந்தனர். நல்ல மனதுடன்வாழ்ந்து பாருவும் இறந்தாள். யோகி தள்ளாத வயதில் புதிய சமுதாய நிகழ்ச்சிகளைக் கண்டு ஆனந்த கண்ணீர் வடித்தான்.

**லிங்கையா பாத்திரப்படைப்பு**

லிங்கையாவின் பாத்திரப்படைப்பு மூலம் படக இனத்தவரின் வழி வழியாக வரும் பண்பாட்டு சிந்தனைகளையும் உழைத்து வாழும் உணர்ச்சிமிகு இயல்புகளையும் கூட்டுணர்வாய் வாழ நினைக்கும் அன்புப் பெருக்கையும் காணலாம் நடு நாயகமான படக இன தலைவன் போல் லிங்கையாவை படைத்து அவன் இயற்கை பின்னணியிலும் இன மரபிலும் எத்தகைய இன்ப துன்பங்களுடன் இயங்குகிறான் என்பதை தட்டிக்கே உரிய மண்வாசனையுடன் படைக்கப்பட்டுள்ளார். பாத்திரப்படைப்பில் பொதுவாக தான் கையாளும் உத்திகளான தானே ஈடுபட்டு விளக்குதல், பாத்திரங்களின் உரையாடல் மூலம் விளக்குதல் என்பனவற்றின் மூலம் லிங்கையாவின் உயிர்ப்பையும் இயக்கத்தையும் காட்டுகிறார்.

படகரின் கூட்டு வாழ்க்கையின் காரணமாக உள்ள அன்பின் மிகுதியை லிங்கையாவிடம் காண முடிகிறது. காலை எழுந்து கிழக்கு நோக்கி கதிரவனை கும்பிடுவது, எருமையின் மடியில் கை வைத்து பால்குழாயில் வெண்நுரை பொங்க. பால் கறப்பது, மண்ணில் பாடுபடுவது என அவருடைய இன வாழ்க்கையின் இயல்பை அப்படியே லிங்கையாவிடம் காணலாம். மேலும் ஒரு சிறப்பினையும் காணமுடிகிறது. தன் அண்ணன் மண்ணில் உழைப்பதே இல்லை மது அருந்தி திரிவது தெரிந்தும் அண்ணனுடைய குடும்பத்தையும் சேர்த்து தான் காப்பாற்றுகிறார். அண்ணியின் மனப்போக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாக இல்லாவிட்டாலும் அண்ணன் மாதவன் குடும்பத்தைத் தன் குடும்பமாகவே நினைக்கிறார். காரணம் அண்ணன் மாதவன் இசை ஈடுபாடு தான். இறைவனை நினைத்து மனம் உருகி பாடும்போது தன்னையே பறிகொடுத்து விடுவான். இசையில் மூழ்கி இவ்வுலக வாழ்வின் சகல இன்ப துன்பங்களுக்கும் அப்பாற்பட்டு தன்னை மறந்து இருக்கும் மாதவன் அந்த அபூர்வமான தன்மையை அங்கே உணர்ந்து கொள்கிறார். லிங்கையாவின் இந்த பண்பு அவனுடைய உழைப்பிலும் உறவுணர்ச்சியிலும் ஓர் ஆழ்ந்த பட்டதலையும் மகிழ்ச்சியும் ஏற்படுத்துகிறது. அவர்களுக்காக எதையும் செய்யும் லிங்கையா திருமணமான பின்பும் ஊதாரியாக கிளம்பிவிட்டு பணத்தை சூதில் விட்டு தன்னிடம் வந்து பொய்யாக ரங்கன் நடித்த

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

போதும் தான் வைத்திருந்த பணத்தையும் அவனிடம் கொடுக்கிறான். அவரது இறப்பைக் கூறும் போது,

> **அந்த முகம் பறித்தெடுத்த மலர் போல் நிமிர்ந்து இருந்தது. கண்ணிதழ்கள் உறக்கத்தில் ஆழ்ந்தவை போல் மூடி இருந்தன. உதடுகளில் உள்ளடங்கிய புன்னகை வெளியே பீறிட முண்டி நிற்பது போன்ற நிறைந்த அழகு. முகத்திலே என்றுமில்லாத தெளிவு அமைதி சிமிழில் இயங்கிய உயிர்க் காற்று பறந்து செல்ல விடுதலை தந்த நித்திய வடிவமாக உடல் கிடந்தது." (பக் 198)**

என்று படிப்போரை கலங்கும் வகையில் படைத்திருப்பார்.

**கிருஷ்ணன் பாத்திரம்**

ஹட்டியின் இரு முக்கிய குடும்பத் தலைவர்களில் ஒருவரான கரிய மல்லரின் மகன் இவன். கிருஷ்ணனை ஓர் லட்சிய பாத்திரமாக படைத்துள்ளாரோ என நினைக்கத் தோன்றும். அவருடைய காதல் எப்போதும் அன்பு காட்டும் போக்கு அவன் நினைக்கும் புதுமைகள் அதிகம் செல்வ குடும்பத்தில் பிறந்ததால் கிடைத்த கல்வி பெருமையும் இவனிடம் நிறைந்துள்ளன. மாறிவரும் சமூக போக்கில் ஹட்டிக்குரிய மண்ணு ழைப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டு நகரத்தில் வழக்கறிஞர் ஆகிவிடுகிறான் கிருஷ்ணன். வெளி உலகில் ஏராளமான தொடர்பும் பெருமையும் கிடைத்ததும் ஹட்டியுடன் பழைய உணர்வுடன் ஒட்டும் பண்பு ஆகியன மூலம் கிருஷ்ணனை ஒரு படகனாகவே படைத்துள்ளார். நவீன மாற்றங்களைப்புரிந்து கொண்ட தன் இனத்தாரின் குறைபாடுகளைப் புரிந்து கொண்ட ஒரு நடைமுறைச் செயல் வீரனாக வே படைக்கப்பட்டுள்ளான், ஒரு படக இனத்தின் மாறிவரும் சமூக நிலையில் நிகழும் நிகழ்ச்சிகளூடே, அவ்வினத்தின் பேராற்றலையும் மனித பெருமையையும் கிருஷ்ணனிடம் காணலாம். மாறிவரும் சமூக போக்கில் ஹட்டிக்குரிய செயலில் இருந்து முற்றிலும் விடுபட்டு நகரத்தில் வாழ்கிறான தேயிலை தோட்டம் போட்டு பணம் வந்தபோது கிருஷ்ணனின் தந்தை தேயிலைத் தோட்ட முதலாளி ஆகிவிடுகிறார். பங்களா, கார் என கிருஷ்ணனின் வாழ்க்கை தரம் உயர்கிறது. இவன் உயர்வில் இன்னொரு சிறப்பு அம்சம் சுதந்திரப் போராட்டத்தில் இவன் கலந்து, இவன் முயற்சியினால் தான் ஹட்டிக்கு பள்ளிக்கூடம் அமைக்கிறது. வெளி உலகில் மாவட்ட அளவில் இவன் பெருமையும் தலைமையும் கொண்டிருந்தாலும் ஹட்டிகள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று நினைவு இவனை விட்டு நீங்கவே இல்லை. ஜோகின் தந்தை இறந்தபோது ஆடல் பாடல் கூடாது என யோகி கூறிய போது கிருஷ்ணன் ஆதரித்தார். சாவு நேரத்தில் ஆடலும் பாடலும் பொருத்தமற்றது என அறிவுப்பூர்வமாக அவன் ஆதரித்தார். அவ்வாறு முற்றிலும் புதியவனாக படகர் இனத்தின் பழம் மரபு சிந்தனைகள் இருந்து விடுபட்டு புத்துலகு காண விளையும் மனிதனாக கிருஷ்ணன் காணப்படுகிறார்.

**ரங்கன பாத்திரம்**

*குறிஞ்திதேன்* புதினத்தில் கதையின் மையமாக இருப்பவன் ரங்கன், படகரின் வாழ்க்கையில் வழிவழியாக வரும் பண்பாட்டுப் போக்கில் ஏற்படும் புதிய மாற்றத்தையும்

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

அதன் விளைவாக ஏற்படும் மனப்போக்கையும் ரங்கனிடத்தில் தான் காண முடியும். உழைக்காத தன் தந்தையால் வீட்டில் உள்ள வறுமை, தன்னுடைய அன்னை இல்லாததால் ஏற்படும் அனாதை உணர்வு, இவற்றுடன் தன்னை யாரும் மதிப்பதில்லை என்ற சினமும் சேர்ந்து ரங்கனை முரடனாக மாற்றுகின்றன. அணை கட்டுவதை எதிர்க்கும் கும்பலை வழி நடத்தி வரும் போது ஏற்பட்ட கலவரத்தில் போலீசாரின் துப்பாக்கி சூட்டிற்கு பலியாகிறான். துப்பாக்கி காயம் பட்ட ரங்கனை கிருஷ்ணனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறான். உயிர் பிரிந்த பின் யாவரும் இணைந்ததாக கதை அமைகிறது. அவனுடைய பொருமல்களும் ஹட்டி வாழ்வை வெறுக்கும் மனநிலையும் மாறிவரும் சமூக நிலையைப் பிரதிபலிக்கும் நல்ல படைப்பு தன்மை எனலாம். தங்களுடைய குடும்ப வாழ்வை பொறுத்தவரையில் அவனுக்கு என்றுமே குடும்ப பொறுப்பு கிடையாது. ஊட்டியில் பழக்கமான குதிரை பந்தயம், மது, சீட்டாட்டம் ஆகிய அவரிடமிருந்து போகவில்லை. எனவே குடும்பத்திற்கு அவனால் உதவி ஒருநாளும் கிடையாது. தன் போக்கிலேயே வாழ்ந்து பழக்கப்பட்ட குடும்பமான பிறகும் கூட அப்படியே வாழ்கின்றார். ஆயினும் பாருவின் காதல் நெஞ்சம் தன்பால் இல்லை என்ற உணர்வு, அவன் இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்த பின் விஸ்வரூபம் எடுக்கிறது. கௌரி என்ற இன்னொருத்தியுடன் அவன் தொடர்பு வைத்திருந்தாலும் பாருவையின் அலட்சியம் அவனுடைய மனதில தீயாக மூழாமல் இல்லை. குழந்தைகளை பிளேக்நோய் தாக்கிய போது ஏற்பட்ட வேதனை அவனையும் தாக்காமல் இல்லை,

> **"அவளுடைய மௌன துயரத்தை இரங்கும் நெஞ்சில் உணர்ந்தான். கண்ணீருடன் எஸ்டேட் அருகில் உள்ள ஆஸ்பத்திரி மருத்துவரை அழைத்து வந்தார். ஆனால் குழந்தை இறந்து விட்டன" (பக் 232)**

பதிவு செய்கிறார்.

**ஜோகி பாத்திரப்படைப்பு**

ஜோகி பாத்திரம் நாவல் முழுவதும் கள்ளம் கபடம் அற்ற ஓர் உயிர் பாத்திரமாகவே அமைந்துள்ளது. அவனை இளமையிலேயே ஒரு நல்ல மனிதனாக காட்டுகிறார். நியாய உணர்விலும் குடும்பப் பற்றிலும் உழைப்புணர்விலும் சிறந்து திகழும் ஜோகிக்கு தன் இனத்திற்கே உரிய பழமை பற்றும் இல்லாமல் இல்லை. மரகத மலை அருகே நவீன மாற்றங்கள் நிகழும் போது அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அணைக்கட்டுக்காக நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்ட போது அதைக் கடுமையாக எதிர்க்கிறான். அவருடைய சின உணர்ச்சியும் மீண்டும் எழுகின்றன. அணைக்கட்டு வேலைக்கு வந்திருக்கும் தன் மகன் நஞ்சனுடன் மோதுகிறான். கிருஷ்ணனின் சூழ்ச்சி தான் என்று ஆத்திரத்துடன் பேசுகிறான். ஆனால் ரங்கனின் சாவுக்குப்பின் நிலைமை மாறிவிடுகிறது. நாவலை முடிக்கும் போது ஜோகியுடன் தான் முடிக்கிறார் ஆசிரியர் நவீன மாற்றங்களைப் புரிந்து கொண்டவனாக அவற்றால் மனம் மகிழ்பவனாக அவன் மாறி விடுகிறான். ஹட்டி மண்ணோடு ஒட்டிய குறைகளோடும் நிறைகளோடும் கூடிய படகனாகவே படைக்கப்பட்டுள்ளான். பாலியல்

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

அடிப்படையில் ஆணினம், பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் விதத்தில் உலகெங்கிலும் ஒரு பொதுத் தன்மையைக் காண முடிகிறது. எல்லாவகைச் சமூக நிறுவனங்களும் ஆணை உயர்த்தி பெண் இனத்திற்கு அநீதி இழைக்க முயன்றிருக்கின்றன. இவ்வாறு அநீதி இழைக்கும் முறை வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலேயே தொடங்கி இருக்க வேண்டும் என்பது சான்றாக அமைகிறது.

**பாருவின் பாத்திரப்படைப்பு**

ரங்கனின் மனைவி அறியாமையின் பிரதிநிதியாகவும் காட்சி அளிக்கிறாள். தொடக்கத்தில் சிறு குழந்தையாக யோகியை தேடி மருதமலையில் ஓடி வருகிறான். பின் பருவம் வந்தவுடன் தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றியதிலிருந்து ஜோதிடம் மனதைப் பறிகொடுக்கிறாள். ரங்கன் அவளை மணக்க முயன்ற போது அவனுக்கு எதிராகவே தன் மனம் கிருஷ்ணனிடம் இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறாள். இவளுடைய இந்த தீவிரமே ரங்கனுக்கு ஒரு சவாலாக மாறுகிறது. ரங்கனுக்கு மனைவியான பின் தாலிக் கட்டிய அடிப்படையில் லட்சிய பெண்ணாக அவள் இல்லை. ஜோதியும் எங்கேயாவது அவளைப் பார்க்க வரும்போது முகத்தை திருப்பிக் கொள்கிறாள். லிங்கையாவின் அறிவுரையால ரங்கனுடன் வாழ்கிறாள். இரண்டு குழந்தைகள் இறந்து விடுகின்றன. தன் குழந்தைகளை இழந்து தனியாக இருப்பதற்கு காரணம் பொறாமை தான் என்பாள். ரங்கன் ஒருமுறை அவனிடம் காதல் பிச்சை கேட்பது போல அவருடன் பேசும்போது தன் பொறாமை உணர்வை எண்ணிப் பார்க்கிறாள். கிரிஜாவின் மகன் நஞ்சனை தன் மகனாக எடுத்துக் கொண்ட பின் அவள் போக்கு மாறுகிறது. காதல், பொறுப்பு, இழப்பு, தனிமை, தாய்மை என மாறி மாறி காட்சி அளிக்கும் பாரு எந்த இடத்திலும் படகர் பெண்ணுக்குரிய இயல்பான குணங்களிலிருந்தும் தன் சமூக நிறை குறைகளில் இருந்தும் விலகி காட்சி அளிக்கவில்லை. அவளை இறுதியாகக் காட்டும்போது நிறை மனதோடு இறந்ததாகவே முடிக்கிறார் ஆசிரியர்.

**முடிவுரை**

நீலகிரி மலையில் வாழ்ந்து வரும் படகர் இனத்தவர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவினர்தான் என்றாலும் உழைப்பாலும் தங்களுடைய கூட்டுவாழ்க்கையாலும் பெருமையுடன் திகழ்ந்தவர்கள். சிறு சிறு குடியிருப்புகளாக ஆங்காங்கே வாழ்ந்து வருபவர்கள். மரகத மலை குடியிருப்பில் உள்ள லிங்கையாவின் குடும்பமும் கரியமல்லரின் குடும்பமும் வடகர்களின் வாழ்க்கை முறைகளை நமக்குத் தருகின்றன குறிஞ்சித்தேன் மரகத மலையில் வசிக்கும் மக்களின் பண்பாடுகள் மற்றும் பழக்க வழக்கங்களைப் பதிவு செய்து நிற்கிறது. படகரின் சமூகம் இயற்கை வாழ்வின் இனிய நிலையில் இருந்து வந்தது அதுவே பெருமை என்பதையும் அவர்களின் வாழ்வில் உழைப்பு சக்தியின் முதன்மையையும் காட்டவும் கதை அமைந்துள்ளது. ராஜம் கிருஷ்ணன் கதை அமைப்போடு படகரின் பண்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

**துணை நூற்பட்டியல்**

[1] ராஜம் கிருஷ்ணன். குறிஞ்சித்தேன். நாம் தமிழர் பதிப்பகம், கௌரா ஏஜென்ஸீஸ், சென்னை, 2022.

[2] எழுத்தே வாழ்வு: ராஜம் கிருஷ்ணன். https://www.hindutamil.in/news/supplements/penn-indru/188164-.html 20 ஏப்ரல் 2024 அன்று அணுகப்பட்டது.

[3] ராஜம் கிருஷ்ணன். காலம் தோறும் பெண்மை. தாகம், சென்னை, நவம்பர், 1990.

[4] ஏங்கெல்ஸ், பி, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம். பாரதி புத்தகாலயம், சென்னை, பிப்ரவரி, 2008.

[5] தந்தை பெரியார். பெண் ஏன் அடிமையானாள்?. பாரதி புத்தகாலயம், சென்னை, மறுபதிப்பு, 2006.

[6] பிரேமா, இரா. கற்பு - கலாச்சாரம். தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, நவம்பர், 1998.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.